**மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், சாத்தூர்**

முன்னிலை : செல்வி.அ.இலக்கியா, பி.பி.ஏ., எல்.எல்.பி.,
மாவட்ட உரிமையியல் நீதிபதி, சாத்தூர்.

2026 ம் ஆண்டு ஜூலை திங்கள் 04 ம் நாள் சனிக்கிழமை

**அசல் வழக்கு எண்.23/2023**

\-------

எட்டு கிராமத்து கம்பளத்து நாயக்கர்களுக்கு பாத்தியப்பட்ட இ.முத்துலிங்கபுரம் கிராமத்திலிருக்கும் அருள்மிகு சக்கதேவி கோவில் அதன் பரம்பரை பூசாரியுமான, கம்பளத்து நாயக்கர் சமுதாயத்தினரின் பிரதிநிதியுமான ச.முத்தையா, வயது 67, த/பெ.சக்கநாயக்கர், இ.முத்துலிங்கபுரம் கிராமம், சாத்தூர் வட்டம், விருதுநகர் மாவட்டம்.

.... வாதி

/எதிர்/

1) சக்கரைச்சாமி, வயது 35, த/பெ.முத்துராமலிங்கம், கதவு எண்.1/27, K.K.S.S.N நகர், ரோசல்பட்டி, விருதுநகர் மாவட்டம்.

2) ஆறுமுகம், வயது 30, த/பெ.சந்தன மகாலிங்கம், நென்மேனி வழி, கோஸ்குண்டு, சாத்தூர் வட்டம், விருதுநகர் மாவட்டம்.

3) கந்த வேலம்மாள், வயது 72, க/பெ.குஞ்சில்சாமி, நென்மேனி வழி, கோஸ்குண்டு, சாத்தூர் வட்டம், விருதுநகர் மாவட்டம்.

4) சங்கரவேல், வயது 60, தகப்பனார் பெயர் வாதிக்கு தெரியவில்லை, கதவு எண்.1/1116, காந்தி நகர், பாண்டியன் நகர், விருதுநகர் மாவட்டம்.

5) மாவட்ட ஆட்சியர் அவர்கள், மாவட்ட ஆட்சியர் அலுவலகம், விருதுநகர் மாவட்டம்.

*6) சக்கரைசாமி, வயது 51, த/பெ.சந்தன மகாலிங்கம், கதவு எண்.1/169, கிழக்கு தெரு, கோஸ்குண்டு கிராமம், சாத்தூர் வட்டம், விருதுநகர் மாவட்டம்

*7) முத்துபாண்டி, வயது 32, க/பெ.ஆறுமுகம், கதவு எண்.169, கிழக்கு தெரு, கோஸ்குண்டு கிராமம், சாத்தூர் வட்டம், விருதுநகர் மாவட்டம்

*8) கந்தசாமி, வயது 56, த/பெ.மாரிமுத்து, கதவு எண்.4/907E, காலனி தெரு, மலைப்பட்டி, கூத்திப்பாறை, அருப்புக்கோட்டை வட்டம், விருதுநகர் மாவட்டம்.

*9) அழகுமூர்த்தி, த/பெ.முத்துராமலிங்கம், கதவு எண்.1/28, கே.கே.எஸ்.எஸ்.என். நகர், ரோசல்பட்டி கிராமம், விருதுநகர் மாவட்டம். .... பிரதிவாதிகள்

*** Impleaded as per order in IA 03/2023, dated: 05.12.2023**

*** Amended as per order in IA 06/2026, dated: 24.02.2026.**

எட்டு கிராமத்தைச் சார்ந்த கம்பளத்து நாயக்கர் சமுதாயத்தினர் அனுபவத்திலும், நிர்வாகத்திலும் இருந்து வரும் இ.முத்துலிங்கபுரம் சக்கதேவி கோயில் மற்றும் அது அமைந்துள்ள சர்வே எண். 117 ல் 16.16 ஏக்கர் நிலத்தில் மையத்தில் சக்கதேவி கோவில் அமைந்துள்ள 1.57 செண்ட் நிலத்தில் அமைந்துள்ள 400 ஆண்டுகால தொன்மையும், ஐதீகமான சக்கதேவி சிலையை மாற்றவோ, கர்ப்பகிரகமான குடிசையினை அகற்றவோ, கோயிலின் சுற்றுச் சுவரான இலந்தை மர வேலியினை அகற்றவோ, மாற்றம் செய்யாமலிருக்க 1 முதல் 4 பிரதிவாதிகள் மற்றும் அவரது வகையாறாக்களுக்கு எதிராக நிரந்தர உறுத்துக்கட்டளை பரிகாரம் வழங்கக் கோரியும், மேலும் 1ம் தபசில் சொத்தான கோயில் நிலத்தில் 1 முதல் 4 பிரதிவாதிகளால் அமைக்கப்பெற்றுள்ள தகரக் கொட்டகையான 3 ம் தபசில் சொத்தை அகற்றிட 1 முதல் 4 பிரதிவாதிகளுக்கு எதிராக செயலுறுத்துக்கட்டளை பரிகாரம் வழங்கக்கோரியும், மற்றும் இந்த வழக்கின் செலவு தொகையை வாதிக்கு 1 முதல் 4 பிரதிவாதிகள் கொடுக்கும்படிக்கும் மேலும் இதர பரிகாரங்கள் வழங்கக் கோரியும் இவ்வழக்கு தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

| | | |
|---|---|---|
| வழக்கு தாக்கல் நாள் | – | 07.11.2022 |
| வழக்கு மூலம் | – | 14.12.1974, 18.07.1976, 18.09.2003, 15.09.2021, 06.10.2022, ஆகிய தேதிகளில் சாத்தூர் வட்டம், இ.முத்துலிங்காபுரம் கிராமத்தில் வைத்து உற்பத்தி. |
| தாவா மதிப்பு | – | 1) நிரந்தர உறுத்துக்கட்டளை பரிகாரத்தின் மதிப்பு ரூ.1000/–<br>2) செயலுறுத்துக்கட்டளை பரிகாரத்தின் மதிப்பு ரூ.1000/–<br>மொத்த மதிப்பு – ரூ.2000/– |
| நீதிமன்ற கட்டணம் | – | தமிழ்நாடு நீதிமன்ற கட்டண சட்டம் பிரிவு 27(c)–ன் படி(ரூ.30/– + ரூ.30/– = ரூ.60/–) மொத்தம் ரூ.60/– செலுத்தப்பட்டுள்ளது. |

இவ்வழக்கு இன்று என் முன்பு விசாரணைக்கு வந்தபோது வாதி தரப்பில் வழக்கறிஞர் திரு. S.மாரிமுத்து அவர்கள் முன்னிலையாகியும், 1 முதல் 4 பிரதிவாதிகள் தரப்பில் வழக்கறிஞர் திரு. D. பாஸ்கரன் அவர்கள் முன்னிலையாகியும், 5 ம் பிரதிவாதி தரப்பில் அரசு தரப்பு வழக்கறிஞர் திரு. K. குமரவேல் அவர்கள் முன்னிலையாகியும், வழக்கு விசாரணைக்காக போடப்பட்டிருந்த நிலையில் சீர்திருத்த பிராது தாக்கல் செய்ய பல வாய்ப்புகள் வழங்கப்பட்டும், வாதி எவ்வித நடவடிக்கையும் எடுக்காத காரணத்தினாலும், இன்று இந்நீதிமன்றம் கீழ்க்கண்டவாறு வழங்கும் .....

<u>தீர்ப்பாணை</u>

1) வாதிக்கு சீர்திருத்த பிராது தாக்கல் செய்ய பல வாய்ப்புகள் வழங்கப்பட்டு, வாதி உரிய நடைமுறையை பின்பற்றாத காரணத்தினால், இவ்வழக்கின் உண்மையையும், சூழ்நிலையையும் கருத்தில் கொண்டு இவ்வழக்கு தள்ளுபடி செய்யப்படுகிறது.

2) செலவுத்தொகை பற்றிய உத்தரவில்லை
   (இரு தரப்பிலும் செலவுத்தொகை பட்டியல் தாக்கல் இல்லை)

## <u>தபசில் சொத்து விபரம்</u>

### <u>1 வது தபசில் சொத்து</u>

விருதுநகர் மாவட்டம், சாத்தூர் வட்டம், இ.முத்துலிங்கபுரம் கிராமம், சர்வே எண்: 117 ல் உள்ள 16.16 ஏக்கர் நிலத்தின் மையத்தில் 1.57 செண்டு நிலத்தில் அமைந்துள்ள எட்டு கிராமங்களைச் சார்ந்த கம்பளத்து நாயக்கர்களின் சக்கதேவி கோயில்

(கோயில் கட்டிடங்களற்றது கோயில் அமையப்பெற்றுள்ள நிலம் சக்கதேவி கோயில் புறம்போக்கு நிலமாகும். இருப்பினும் கோயிலானது ரூ.90,000/- என மதிப்பிடப்பட்டுள்ளது)

### <u>2 வது தபசில் சொத்து</u>

விருதுநகர் மாவட்டம், சாத்தூர் வட்டம், இ.முத்துலிங்கபுரம் கிராமத்தில் புறம்போக்கு நிலமான சக்கதேவி கோவில் சர்வே எண் 117-ல் உள்ள 16.16 ஏக்கர் நிலம் (புறம்போக்கு நிலம் என்பதால் வருவாய்துறை ஆவணங்களில் மதிப்பு "0" என உள்ளது)

**<u>3 வது தபசில் சொத்து</u>**

விருதுநகர் மாவட்டம், சாத்தூர் வட்டம், இ.முத்துலிங்கபுரம் கிராமம், சர்வே எண் 117 ல் கோயிலின் வடகிழக்கில் 15 மீட்டர் தூரத்தில் பிரதிவாதிகளால் அமைக்கப்பெற்றுள்ள 8 அடி அகல மற்றும் 8 அடி நீள அளவுள்ள தகரக் கொட்டகை மற்றும் அதில் உள்ள சிலை மற்றும் கட்டுமானத் தளவாடப் பொருட்கள் இதன் மதிப்பு ரூ.10,000/— ஆகும்.

2026 ம் ஆண்டு ஜூலை திங்கள் 04 ம் நாள் எனது கையெழுத்தும் இந்நீதிமன்ற முத்திரையும் இடப்பட்டது.

ILAKKIYA Digitally signed by ILAKKIYA

மாவட்ட உரிமையியல் நீதிபதி,
சாத்தூர்.

மாவட்ட உரிமையியல் நீதிபதி,
சாத்தூர்.
அ.வ. எண்.23/2023
தீர்ப்பாணை
04.07.2026